PUBLIC RELATIONS DIVISION
Name of the Newspaper: DINAMANI Date: 22-11-12

## சென்னை சென்ட்ரல் சதுக்கம்

# திட்டப் பணிகள் 2020-ஆம் ஆண்டு நிறைவடையும்!

நமது நிருபர்

சென்னை, நவ. 21: சென்னை சென்ட்ரல் சதுக்கம் அமைக்கும் திட்டப் பணிகள் 2020-ஆம் ஆண்டுக்குள் நிறைவு பெறும் என்று சென்னை மெட்ரோ ரயில் நிறுவன வட்டாரங்கள் தெரிவித்தன. மேலும் போக்குவரத்துக்கு பாதிப்பில்லாத வகையில், இந்தத் திட்டத்தில் பல்வேறு மாற்றங்கள் மேற்கொள்ளப்பட உள்ளன.

**ரூ.400 கோடியில்:** சென்னை மெட்ரோ ரயில் கழகம் மூலம் சுமார் ரூ.400 கோடி செலவில் ரிப்பன் மாளிகை, விக்டோரியா பொதுமக்கள் கூடம், புறநகர் ரயில் நிலையம், சென்னை சென்ட்ரல் ரயில்நிலையம், சென்னை ரயில்வே தலைமை அலுவலக கட்டடம், சென்னை மருத்துவக் கல்லூரி, அரசு பொது மருத்துவமனை, பூங்கா நகர், பூங்கா ரயில் நிலையம் மற்றும் ராமசாமி முதலியார் சத்திரம் ஆகியவற்றுக்கு அருகே உள்ள பகுதிகள் உலகத் தரத்தில் மேம்படுத்தப்பட்டு மத்திய சதுக்கமாக அமைக்கப்படவுள்ளன.

இந்த சென்னை சென்ட்ரல் சதுக்கத்தில் பயணிகளுக்கான வசதிகள், கீழ்தளத்தில் வாகன நிறுத்தும் வசதி, பாதசாரிகளுக்கான நடைபாதை மற்றும் தரைத்தள வாகன நிறுத்தும் வசதி ஆகியவற்றை கொண்ட ஒருங்கிணைந்த பலதரப்பட்ட போக்குவரத்து வசதிகள் மேம்படுத்தப்படவுள்ளன.

**கூவம் ஆற்றங்கரையோரம்:** சென்னை சென்ட்ரல் சதுக்கம், கூவம் ஆற்றின் கரையோரங்களில் அமையவிருக்கிறது. இதன் காரணமாக, கடலோர ஒழுங்கு முறை ஆணையம் இந்தத் திட்டம் குறித்து விரிவான ஆய்வறிக்கையை கேட்டுள்ளது. மேலும், கூவம் கரையோரங்களில் சென்ட்ரல் சதுக்கத்தையொட்டி பிரம்மாண்டமான கட்டடங்கள் கட்டப்படவுள்ளதால், ஆற்றுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதில் கடலோர ஒழுங்குமுறை ஆணையம் கவனமாக இருக்கிறது. எனவே, இந்தத் திட்டம் குறித்த விரிவான அறிக்கை ஆணையத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆணையம் உடனடியாக ஒப்புதல் அளிக்கும்பட்சத்தில், இத்திட்டத்துக்கான முதல்கட்டப் பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

**பிரம்மாண்ட ரயில் நிலையம்:** . வண்ணாரப்பேட்டை முதல் விமான நிலையம் செல்லும் ரயிலும், சென்னை சென்ட்ரலில் இருந்து கோயம்பேடு செல்லும் ரயிலும் என இரண்டு அடுக்குகளாக, சென்னை சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையம் பூமிக்கடியில் பிரமாண்டமாக அமைக்கப்பட்டுள்ளது. இந்த ரயில் நிலையத்திலிருந்து, சென்னை சென்ட்ரல் ரயில் நிலையம், சென்னை சென்ட்ரல் புறநகர் ரயில் நிலையம், பூங்கா நகர் மாடி ரயில் நிலையம் மற்றும் பூங்கா நகர் ரயில் நிலையம் ஆகிய முக்கிய ரயில் நிலையங்களுக்கு இணைப்பு வழி கொடுக்கப்படவுள்ளது.

**இரட்டை கோபுரங்கள்:** இதற்கிடையே, சென்ட்ரல் மெட்ரோ ரயில் சதுக்கம் அருகே, ரூ.400 கோடியில் தலா 10 அடுக்குமாடிகளுடன் பிரம்மாண்ட இரட்டை கோபுரம் அமைக்கப்படுகிறது. சென்னை சென்ட்ரல், பார்க் ரயில் நிலையங்கள், ரிப்பன் மாளிகை, ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனை ஆகிய இடங்களிலிருந்து இந்த இரட்டை கோபுரத்துக்கு செல்ல சுரங்கப் பாதைகள் அமைக்கப்படவுள்ளன. இக்கட்டிடம் சுமார் 60 மீட்டர் உயரம் கொண்டதாக இருக்கும். இதற்கான ஒப்புதலை சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் (சிஎம்டிஏ) விரைவில் வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

'அமெரிக்க நாட்டில் உள்ள நியூயார்க் டைம்ஸ் சதுக்கம் போல், சென்னை சென்ட்ரல் சதுக்கம் அமையும். சென்னை கடற்கரைக்கு வரும் மக்கள் இந்த இரட்டை கோபுரங்களையும் காணும் வகையில் சிறப்பு ஏற்பாடுகள் செய்யவுள்ளோம்; வாகனங்கள் நிறுத்தும் வசதி, ஷாப்பிங் மால்கள், திரையரங்குகள், விளையாட்டு திடல்கள், உணவகங்கள் உள்பட பல்வேறு வசதிகளும் இதில் அமைக்கப்படும்' என்றும் மெட்ரோ ரயில் நிறுவன வட்டாரங்கள் தெரிவித்தன.